## திருநெல்வேலி தெக்ஷிண மாற நாடார் சங்கம் கல்லூரி தெ.கள்ளிகுளம்

---

## 47 வது ஆண்டு விழா 20.03.2018

## ஆண்டறிக்கை

---

திருநெல்வேலி தெக்ஷிண மாற நாடார் சங்கம் கல்லூரியின் 47 வது ஆண்டுவிழாவிற்கு தலைமை வகிக்கும் போற்றுதலுக்குரிய கல்லூரியின் ஆட்சிக்குழு மற்றும் கல்லூரிக்குழு தலைவர் திரு.டி.ஆர். சபாபதி நாடார் அவர்களே!

கல்லூரியே மூச்சாய் வாழும் கல்லூரி செயலர் திரு.ஆர். சண்முகவேல் நாடார் அவர்களே!

விழாவில் கலந்து சிறப்புரையாற்றி, பரிசுகள் வழங்கி கௌரவிக்க வருகை தந்துள்ள சிறப்பு விருந்தினர், திருநெல்வேலி மண்டலக் கல்லூரிக்கல்வி இணை இயக்குநர் திருமதி(முனைவர்) தா. சரளா தேம்பாவணி, அவர்களே!

கல்லூரியின் வளர்ச்சியில் அங்கம் வகிக்கும் தகைசால் கல்லூரிக்குழு மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்களே! நிர்வாக சபை இயக்குநர்களே! பெற்றோர் ஆசிரியர் கழகம் மற்றும் பயின்றோர் கழக பொறுப்பாளர்களே!

பேராசிரியப் பெருந்தகைகளே! அலுவலக நண்பர்களே! அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே! பெற்றோர்களே! இதர விருந்தினர்களே! நமது கல்லூரியின் 47வது ஆண்டு விழாவில் கலந்து சிறப்பிக்கும் அனைவரையும் வணங்கி வரவேற்று ஆண்டறிக்கையை மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கிறேன்.

நமது கல்லூரி 1971-ம் ஆண்டு ஜுலை மாதம் 5-ம் நாள் திங்கள் கிழமை திருநெல்வேலி தெக்ஷிண மாற நாடார் சங்கத்தின் அன்றைய தலைவர் திரு.பி.எஸ்.ராஜா பலவேசமுத்து நாடார் மற்றும் செயலர் திரு.எல்.எஸ். தங்கசாமி நாடார் அவர்கள் காலத்தில், அன்றைய தமிழக அமைச்சர் தமிழர் தந்தை திரு.சி.பா. ஆதித்தனார் அவர்களின் திருக்கரத்தால் திறந்து வைக்கப்பட்டது. 'மனிதத்துவத்தில் இறைத்துவத்தை புகுத்தல்' என்ற நோக்கோடு 100 மாணவர்களுடனும் 10 ஆசிரியர்களுடனும் இக்கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. இன்று 2160 மாணவர்கள் 107 ஆசிரியர்கள் மற்றும் 33 அலுவலர்களுடனும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

**மாணவ மாணவிகள்** :

நம் கல்லூரியில் 2017-2018 கல்வியாண்டில் பயிலும் 2,160 மாணவர்களில் 73 விழுக்காடு (1583) மாணவிகள் மற்றும் 27 விழுக்காடு (577) மாணவர்கள். அவர்களில் 1120 மாணவ மாணவியர்கள் அரசு உதவி பெறும் பிரிவுகளிலும் 1040 மாணவ மாணவியர்கள் சுயநிதி பிரிவிலும் பயின்று வருகின்றனர்.

**படிப்புகள்** :

நமது கல்லூரியில் மொத்தம் 14 இளநிலை பட்ட வகுப்புகளும், 8 முதுநிலை வகுப்புகளும் நடைபெறுகின்றன. அரசு உதவி பெறும் பிரிவில் 7 இளநிலை பட்ட வகுப்புகளும், 2 முதுநிலை வகுப்புகளும் நடைபெறுகின்றன. மேலும் சுயநிதி பிரிவில் 7 இளநிலை பட்ட வகுப்புகளும் 6 முதுநிலை வகுப்புகளும் ஒரு முதுநிலை பட்டய வகுப்பும் நடைபெறுகின்றன. பல்கலைக் கழக மானியக்குழுவின் உதவியோடு 5 பணிசார் வகுப்புகளும் நடைபெறுகின்றன. மேலும் வணிகவியல் துறை ஆய்வுமையமாக மாற்றப் பட்டு ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

**ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள்** :

நமது கல்லூரியில் 107 ஆசிரியர்கள் மற்றும் 33 அலுவலர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களில் 47 ஆசிரியர்கள் சுயநிதிப் பிரிவிலும், 12 ஆசிரியர்கள் மற்றும் 20 அலுவலர்கள் நிர்வாகப் பிரிவிலும் பணியாற்றி வருகின்றனர். இந்த கல்வியாண்டில் கணிதத்துறையில் துறைத்தலைவராக 33 ஆண்டுகள் பணியாற்றிய இக்கல்லூரியின் முன்னாள் மாணவர் திரு.பி.தனிஸ் ராஜசேகர் பணிநிறைவு பெற்றார். மேலும் தாவரவியல் துறை தலைவராக பணியாற்றும் முனைவர் து.வானிலா மற்றும் கணிதத்துறை பேராசிரியர் முனைவர்.அ.சிங்கத்துரை ஆகியோர் பணிநிறைவு பெற்று பணி நீட்டிப்பு அடிப்படையில் இக்கல்வியாண்டின் முடிவில் பணி நிறைவு பெறுகிறார். மேலும் ஆய்வக உதவியாளராக பணியாற்றும் திரு.சு.சுந்தரராஜ் இந்த ஆண்டு பணிநிறைவு பெறுகிறார்.

**புதிய ஆசிரியர்கள்** :

இந்த கல்வியாண்டில் அரசு உதவி பெறும் பிரிவு மற்றும் சுயநிதிப் பிரிவுகளில் கீழ்க்கண்ட ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களை நமது கல்லூரி நிர்வாகம் பணியிலமர்த்தி உள்ளது.

| வ. எண் | அரசு உதவிபெறும் பிரிவு ஆசிரியர்கள் | துறை |
|---|---|---|
| 1 | செல்வி.கோ.ஜெரின் | ஆங்கிலம் |
| 2 | முனைவர்.ம.அ.கோகிலவாணி | பொருளாதாரம் |
| 3 | முனைவர்.ந.நாகராஜன் | பொருளாதாரம் |
| 4 | முனைவர்.த.வேல்பாண்டி | வணிகவியல் |
| 5 | முனைவர்.மா.புனிதா | வணிகவியல் |
| 6 | முனைவர்.நா.`ரிபிரகாஷ் | வணிகவியல் |
| 7 | முனைவர்.இ.ராஜசேகரன் | கணிதம் |
| 8 | முனைவர்.செ.கேத்தரின் பியூலா | நூலகம் |

| வ. எண் | நிர்வாகப் பிரிவு ஆசிரியர்கள் | துறை |
|---|---|---|
| 1 | செல்வி டி.மரிய ஆஷா | ஆங்கிலம் |
| 2 | திரு என்.நம்பிராஜன் | ஆங்கிலம் |
| 3 | திருமதி பி.ஞான அந்தோனி பிரியா | வணிகவியல் |
| 4 | திருமதி டி.ஜெசுரா பாலின் | வணிகவியல் |
| 5 | திருமதி ஜெ.ஜெயபிரதா @ சோனியா | கணிதம் |
| 6 | திருமதி எஸ்.ஆல்பா மேரி கிரேஸ் | இயற்பியல் |
| 7 | திருமதி வி.அட்லின் செல்வ கோல்டா | தகவல் தொழில் நுட்பவியல் |
| 8 | திருமதி ஜெ.ஜெப ஸ்டெல்லா | தாவரவியல் |
| 9 | திருமதி ஏ.ஆயுன் வினுவா | தாவரவியல் |

| வ. எண் | சுயநிதிப் பிரிவு ஆசிரியர்கள் | துறை |
|---|---|---|
| 1 | செல்வி எஸ். விவேகா | ஆங்கிலம் |
| 2 | செல்வி பி.சர்மிளி ரோஸ் | ஆங்கிலம் |
| 3 | செல்வி எஸ்.லெஜிலா | கணிதம் |

| வ. எண் | நிர்வாகப் பிரிவு அலுவலர்கள் | பதவி |
|---|---|---|
| 1 | திரு எஸ்.ரங்கசாமி | இளநிலை உதவியாளர் |
| 2 | திரு ஜி.அலெக்ஸ் | இளநிலை உதவியாளர் |
| 3 | செல்வி கே.நந்தினி | தட்டச்சர் |
| 4 | திருமதி ஏ.கல்யாணி | ஆய்வக உதவியாளர் |
| 5 | திரு ஆர்.தங்க விக்னேஷ் | அலுவலக உதவியாளர் |

பணியில் சேர்ந்த புதிய ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்களுக்கு வாழ்த்துகள்.

**தேர்வு முடிவுகள்** :

கடந்த கல்வியாண்டில் ஏப்ரல் 2017-ல் நடைபெற்ற பல்கலைக்கழகத் தேர்வில் இறுதியாண்டு தேர்வு எழுதிய 665 மாணவர்களில் 579 மாணவர்கள் அனைத்து பாடங்களிலும் வெற்றி பெற்று 87 விழுக்காடு வெற்றியைப் பெற்று பெருமை சேர்த்துள்ளனர். (இணைப்பு - I)

இந்த கல்வியாண்டிலும் வழக்கம் போல நமது கல்லூரி பல்கலைக் கழக தரவரிசை பட்டியலில் 26 இடங்களை மிகச் சிறப்பாகப் பெற்று பெருமை சேர்த்துள்ளது, (இணைப்பு-II) இந்த ஆண்டு நாடார் ஆல்வின் என்ற வேதியியல் துறை மாணவர் சிறப்பாக மூன்று தங்கப் பதக்கங்களை (வேதியியல் மற்றும் இந்தி) பல்கலைக்கழகத்திலேயே பெற்ற ஒரே மாணவர் என்ற பெருமையை பெற்று மேதகு ஆளுநர், துணைவேந்தர் மற்றும் பத்திரிகைகளால் பாராட்டு பெற்றது

கல்லூரிக்கே மகுடமாக விளங்குகிறது. துறைகளை ஊக்குவிக்க துறைகளுக்கிடையே நடந்த ஒப்பாய்வில் அதிக அளவில் பல்கலைக்கழக தரவரிசை புள்ளிகளைப் பெற்று முதல் நிலையில் உள்ள தமிழ்த் துறை பாராட்டுக்குரியது.

**அரசு உதவித்தொகை** :

அரசு உதவித் தொகை பெற விண்ணப்பித்த அனைத்து மாணவர்களும் பயன்பெற இந்த கல்வியாண்டில் (2017-2018) அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக பயன் பெற்ற மாணவர்களின் விவரம்.

கல்வி உதவித்தொகை பெற்ற மாணவர்கள் விபரம்

| வ.எண். | விபரம் | பயன்பெற்ற மாணவர்கள் | பெறப்பட்ட உதவித்தொகை(ரூ,) |
|---|---|---|---|
| 1 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 640 | 9,24,549.00 |
| 2 | தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உதவித்தொகை | 77 | 4,50.603.00 |
| | மொத்தம் | 717 | 13,75,152.00 |

**பல்கலைக்கழக மானியக்குழு நிதி** :

இந்த கல்வியாண்டில் (2017-2018) பல்கலைக்கழக மானியக் குழுவிலிருந்து குறுஆய்வுத் திட்டத்திற்காக வேதியியல்துறை இணைப்பேராசிரியர் முனைவர் ஆர்.முருகேசன்,அவர்களுக்கு,ரூ.2,42,500/-ம் இயற்பியல்துறை உதவிப்பேராசிரியர் திரு.எஸ்.ஜெ. பாலமுருகன் அவர்களுக்கு ரூ.3,40,000/- மானியமாக பெறப்பட்டுள்ளது.

**புதிய பொறுப்புகள்** :

இந்த ஆண்டு நமது கல்லூரியில் புதிய பொறுப்புகளில் கீழக்கண்ட ஆசிரியர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள் அனைவருக்கும் பாராட்டுகள்.

| பொறுப்பு | பொறுப்பாளர் |
|---|---|
| கல்லூரி மலர் குழு | முனைவர் கோ.`ரிகோவிந்தராஜ் |
| கல்லூரிக் கையேடு குழு | முனைவர் S.`ரிகிருஷ்ணன் |
| இணையதள நிர்வாகக் குழு | செல்வி T.சாரா ஜெப ஜென்சி |
| Online நிர்வாக்குழு | திருமதி S.பெல்லா அன்னஜோதி |

**பெற்றோர் ஆசிரியர் கழகம் :**

பெற்றோர் ஆசிரியர் கழகம் நமது கல்லூரியில் 30.07.1997 அன்று ஆரம்பிக்கப்பட்டது. பெற்றோர் ஆசிரியர் கழகம் ஆண்டுதோறும் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்த நாளை கல்வி வளர்ச்சி தினமாக நடத்தி வருகிறது. திரு.M.ஜெயக்குமார் அவர்கள் பெற்றோர் ஆசிரியர் கழக செயலராகவும், விலங்கியல்

இணைப் பேராசிரியர் கேப்டன் முனைவர் து.ராஜன் பொருளாளராகவும் செயல்படுகின்றனர். முதல்வரே இதன் தலைவர். இதன் சார்பில் பெருந்தலைவர் பிறந்த நாள் 15.07.2017-ல் கொண்டாடப்பட்டது. அப்போது, பல்வேறு இலக்கியப் போட்டிகள் நடத்தி மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது. கவிஞர் ஓய்த்தி, பெருந்தலைவர் பொதுநலச்சங்கம், பாவூர்ச்சத்திரம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்புரையாற்றினார்கள். இந்த ஆண்டு பெற்றோர் ஆசிரியர் கழகம் சார்பில் ரூ.89,764/- செலவு செய்யப்பட்டுள்ளது.

**கல்லூரி தர உறுதி மையம் :**

கல்லூரி தர உறுதி மையம் வேதியியல் துறை இணைப்பேராசிரியர் முனைவர் சு.முருகேசன் அவர்களைப் பொறுப்பாளராகக் கொண்டு செயல் பட்டு வருகிறது. கடந்த ஆண்டின் (2016-2017) கல்லூரி தர உறுதி அறிக்கை தேசிய தர ஆய்வு மற்றும் சான்றளிப்பு நிறுவனத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

**பயின்றோர் கழகம்** :

நமது கல்லூரியின் பயின்றோர் கழகம் திரு எஸ்.பி.தமிழ்ச்செல்வன் அவர்களை பொதுச் செயலாளராகவும், ஓய்வு பெற்ற வரலாற்றுத்துறைத் தலைவர் திரு சி. கலைச்செல்வன் அவர்களைப் பொருளாளராகவும் கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. முதல்வரே இதன் தலைவர். இந்த ஆண்டு பயின்றோர் கழகம் சார்பில் சுதந்திர தின விழா 15.8.2017-ல் கொண்டாடப்பட்டது. சுதந்தர தின விழாவில் வள்ளியூர் ரோட்டரி கிளப் முன்னாள் தலைவர் திரு எஸ்.கார்த்தீசன் மற்றும் வள்ளியூர் ரோட்டரிக்கிளப் தலைவர் திரு.திவாகர் ஆகியோர் கலந்து கொண்டனர். கலைப் போட்டிகள் நடத்தப்பட்டு மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு பயின்றோர் கழகம் சார்பில் ரூ.56,306/- செலவு செய்யப்பட்டுள்ளது.

**பட்டமளிப்பு விழா** :

நமது கல்லூரியில் 23.03.2018 அன்று பட்டமளிப்பு விழா நடைபெற உள்ளது. நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளராக இயற்பியல் துறை உதவிப்பேராசிரியர் திரு.S.J.பாலமுருகன் அவர்கள் செயல்படுகிறார். மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணை வேந்தர் முனைவர். K.பாஸ்கர் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று மாணவ மாணவிகளுக்குப் பட்டங்களை வழங்கி சிறப்புறை அற்ற இசைந்துள்ளார்கள். பட்டமளிப்பு விழாவில் ஏப்ரல் 2016-ல் பல்கலைக்கழக தேர்வில் வெற்றி பெற்ற 436 மாணவர்களுக்கு நேரடியாக பட்டங்கள் வழங்கப்பட உள்ளது.

**காமராஜர் பிறந்தநாள் விழா :**

இக்கல்வியாண்டில் 15.07.2017 அன்று கல்விக் கண் திறந்த காமராஜரின் பிறந்தநாள் கல்வி எழுச்சி நாளாகக் கொண்டாடப்பட்டது. அன்றையதினம் பல்வேறு

கலைநிகழ்ச்சிகளும், போட்டிகளும் நடத்தப்பட்டன. சிறப்பு விருந்தினராக கவிஞர் ஒய்த்தி, பெருந்தலைவர் பொதுநலச்சங்கம், பாவூர்சத்திரம் அவர்கள் கலந்து கொண்டார். போட்டிகளில் வென்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

**சுதந்திர தின விழா :**

சுதந்திரதின விழா நமது வளாகத்தில் 15.08.2017 அன்று வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கல்லூரி செயலர் திரு R.சண்முகவேல் நாடார் அவர்கள் மூவர்ணக் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரை ஆற்றினார்கள். மேலும் தேசிய மாணவர் படை, நாட்டுநலப் பணித் திட்டம் மற்றும் கல்லூரி மாணவ மாணவிகளும் விழாவில் கலந்து சிறப்பித்தனர். அதன்பின் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் போட்டிகளும் நடைபெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**தமிழர் திருநாள் :**

நமது கல்லூரியில் 12.01.2018 அன்று பொங்கல் விழாவானது ‘தமிழர் திருநாளாக’ கொண்டாடப்பட்டது. தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் த.நிர்மலா அவர்கள் விழாவின் ஒருங்கிணைப்பாளராக செயல்பட்டார். விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் பட்டிமன்றம் நடைபெற்றது. கல்லூரி வளாகத்தில் பொங்கலிடப்பட்டு அனைத்து மாணவர்களுக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இதன் முழுச் செலவையும் பெற்றோர் ஆசிரியர் கழகம் ஏற்றுக் கொண்டது.

**குடியரசுதின விழா :**

இக்கல்வியாண்டில் 26.01.2018 அன்று குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. கல்லூரி செயலர் திரு R.சண்முகவேல்நாடார் அவர்கள் தேசியக் கொடியேற்றி விழாவினை சிறப்பித்தார்கள். பேராசிரியர்களும், அலுவலர்களும் மாணவ மாணவிகளும் விழாவில் கலந்து தங்கள் நாட்டுப்பற்றை வெளிப்படுத்தினர். அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

**நூலகம்** :

நமது கல்லூரியில் பொது நூலகமும் துறைவாரியாக நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன. இவ்வாண்டு நூலகத்திலுள்ள மொத்த நூல்களின் எண்ணிக்கை 26942. மேலும் கல்லூரி சார்பில் செயல்பட்டு வரும் சான்றோர் ஆய்வு மையத்தின் வரலாற்று ஆய்வாளர் S.D. நெல்லை நெடுமாறன் நினைவு நூலகத்தில் 5200 நூல்கள் உள்ளன. நூலகத்தின் சார்பில் கல்லூரி INFLIBNET மையத்தின் ஆதரவோடு ‘Introduction to E-Resources and Style of Writing ’ என்ற தலைப்பில் கல்லூரி ஆசிரியர்களுக்கு முதுகலை மாணவர்களுக்கும் ஆய்வு மாணவர்களுக்கும் ஒரு நாள் பயிற்சி பட்டறை 20.01.2018 அன்று நடத்தப்பட்டது. மனோன்மணியம்

சுந்தரனார் பல்கலைக்கழக நூலகர் முனைவர் (திருமதி)A.திருமகள் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்தார்கள்.

**அக தேர்வு மையம் :** (Internal Examination Wing)

முறையாக கல்வியாண்டின் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டு கல்லூரியின் அக மதிப்பீட்டு தேர்வுகள் சம கால இடைவெளியில் ஒவ்வொரு பருவத்திலும் நடத்தப் படுகின்றன. அக தேர்வுகளை முறையாக நடத்த அமைக்கப்பட்ட அக தேர்வு மையம் விலங்கியல் துறை பேராசிரியர் முனைவர் A.புஷ்பராஜ் அவர்களை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு சிறப்பாக செயல்படுகிறது.

**விரிவாக்க செயல்பாடுகள்** (Extension Activities) :

இளங்கலை பாடத்திட்டத்தின் உட்பிரிவான பகுதி V-ல் உள்ளடக்கிய செயல்பாடுகளாக NCC/NSS/YRC/Sports போன்றவற்றை முறைப்படுத்த தனியாக மேஜர்.டி.ராஜன் அவர்களை ஒருங்கிணைப்பாளராக கொண்டு அமைக்கப்பட்ட குழு சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழு கல்லூரி வளாகத்தை சுத்தமானதாகவும் தூய்மையானதாகவும் அழகு படுத்தப்பட்டதாகவும் மாற்றுகிறது. மேலும் கல்லூரி வளாகத்தை பராமரிக்கும் பணி இந்த அமைப்புகளின் அங்கத்தினராக உள்ள முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு மாணவர்களிடம் பகிர்ந்து கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறையிலும் ஒரு பொறுப்பாசிரியரின் கட்டுப்பாட்டில் வகுப்புகள் இல்லாத நேரங்களில் வளாக தூய்மை பணி நடைபெறுகிறது. இப் பணிகளில் மாணவர்களின் செயல்பாடு அளவிடப்படுகிறது. அதனடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படுகிறது. மேலும் இது தொடர்பாக துறைகளுக்கிடையே போட்டிகள் நடத்தி பரிசு பெற்ற துறைகளுக்கு சுழற்கோப்பைகள் வழங்கப்படுகின்றன.

**நாட்டு நலப் பணித் திட்டம்** :

நமது கல்லூரியில் நாட்டு நலப் பணித் திட்டம் மாணவ மாணவியர்களுக்கு தனித்தனி அணிகளாகச் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன.

மாணவர்கள் (அணி எண்.35) அணியில் 100 மாணவர்கள் அங்கம் வகிக்கின்றனர். அணியின் திட்ட அலுவலராக திரு D.ராஜேந்திரன் ரவிகுமார் அவர்கள் பணியாற்றுகிறார். மாணவிகள் அணியில் (அணி எண். 37) 100 மாணவிகள் அங்கம் வகிக்கின்றனர். மாணவிகள் அணியின் திட்ட அலுவலராக முனைவர் பா.பாலசரஸ்வதி அவர்கள் பணியாற்றுகின்றார்.

இரு அணிகள் சார்பிலும் இந்த கல்வியாண்டில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அவற்றின் விவரம்.

## நிகழ்ச்சி விவரம்

| வ. எண் | நாள் | நிகழ்ச்சி | கலந்து கொண்ட மாணவர்கள் | | |
|---|---|---|---|---|---|
| | | | அணி எண்35 | அணி எண்37 | மொத்தம் |
| 1 | 15.08.17 | சுதந்திரதின விழா | 60 | 85 | 145 |
| 2 | 28.08.17 | தெ.கள்ளிகுளம் அதிசய பனிமயமாதா கோவில் வளாகத்தை தூய்மைப்படுத்துதல். | 30 | -- | 30 |
| 3 | 28.08.17 | தெ.கள்ளிகுளம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தை தூய்மைப்படுத்துதல் | 38 | 38 | 38 |
| 4 | 30.08.17 | டெங்கு விழிப்புணர்வு பேரணி தெ.கள்ளிகுளம் | 35 | 37 | 72 |
| 5 | 03.09.17 | கல்லூரி வளாகத்தை தூய்மைப்படுத்துதல் | 25 | 30 | 55 |
| 6 | 23.09.17 | தாமிரபரணி ஆறு தூய்மை படுத்தும் பணி - திருநெல்வேலி | 43 | -- | 43 |
| 7 | 28.09.17 | டெங்கு விழிப்புணர்வு முகாம் நிலவேம்பு கசாயம் வழங்குதல் மேலக்கள்ளிகுளம் | 25 | -- | 25 |
| 8 | 07.10.17 | நிலவேம்பு கசாயம் வழங்குதல் தி.தெ.மா.நா.சங்கம் கல்லூரி | 20 | 35 | 55 |
| 9 | 12.10.17 | கல்லூரி வளாக தூய்மை மற்றும் டெங்கு பரவுவதை தடுத்தல் | 20 | 25 | 45 |
| 10 | 31.10.17 | டெங்கு விழிப்புணர்வு பேரணி TDMNS கல்லூரி முதல் தெ.கள்ளிகுளம் வரை | 40 | 35 | 75 |
| 11 | 25.01.18 | வாக்காளர் சேர்க்கை மற்றும் விழிப்புணர்வு | 35 | 40 | 75 |
| 12 | 06.02.18 | விவேகானந்த கேந்திரா முகாமுக்கான போட்டி தேர்வு | 20 | 55 | 73 |
| 13 | 10.03.18 | தாமிரபரணி ஆறு தூய்மைபணி - திருநெல்வேலி | 45 | -- | 45 |
| 14 | 21.03.18 to 27.03.18 | சிறப்பு முகாம் தெ.கள்ளிகுளம் (நடை பெற உள்ளது) | 50 | -- | 50 |
| 15 | 21.03.18 | முதியோர் இல்லம் தூய்மை படுத்தும்பணி - ஏர்வாடி | -- | 35 | 35 |
| 16 | 27.03.18 | டெங்கு விழிப்புணர்வு மற்றும் தூய்மைபணி - செம்பாடு (நடைபெற உள்ளது) | -- | 35 | 35 |

### தேசிய மாணவர் படை (NCC)

விலங்கியல் துறைத்தலைவர் மேஜர் டி.ராஜன் அவர்களை அதிகாரியாகக் கொண்டு தேசிய மாணவர் படை நமது கல்லூரியில் சிறப்பாகச் செயல்பட்டுவருகிறது. மாணவர்கள் மற்றும் மாணவிகள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பில் மாணவர்களுக்கு சனிக்கிழமைகளில் பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. மாணவர்கள் பல்வேறு NCC முகாம்களுக்குச் சென்று வரைபடம், ஆளுமைப் பண்பு,

துப்பாக்கி சுடுதல், யோகா, உடல் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வு பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

இதன் சார்பில் இக்கல்வியாண்டில் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

| வ.எண் | நாள் | நிகழ்ச்சி மற்றும் சிறப்பு முகாம் | இடம் | பங்கு பெற்றவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 01.06.2017 to 10.06.2017 | CATC | அன்னை வேளாங்கண்ணி பொறியியல் கல்லூரி அழகப்பபுரம் | 15 |
| 2 | 25.08.2017 to 03.09.2017 | CATC | மதுரை | 20 |
| 3 | 30.08.2017 to 15.08.2017 | AAC | செகந்திராபாத் | 3 |
| 4 | 22.12.2017 to 31.12.2017 | CATC | நாகர்கோவில் | 7 |

மேலும் 31.10.2017 அன்று NCC சார்பாக டெங்கு விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. டாக்டர் G.M. ஜெபஸ்டின் ஆனந்த் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு டெங்கு காய்ச்சல் பற்றி எடுத்துரைத்தார்கள். மேலும் NCC மாணவர்கள் கல்லூரியில் நடைபெற்ற சுதந்திரதினம், குடியரசு தினம் போன்ற நிகழ்ச்சிகளில் அணிவகுப்பு மரியாதை செய்து சிறப்பித்தார்கள்.

இவ்வாண்டு நடைபெற்ற ‘B’ சான்றிதழ் தேர்வை 31 மாணவர்களும் ‘C’ சான்றிதழ் தேர்வை 11 மாணவிகளும் எழுதியுள்ளனர். அனைவரும் தேர்ச்சி பெற வாழ்த்துக்கள்.

**இளம் செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் இரத்ததான கழகம்** :

இளம் செஞ்சிலுவைச் சங்க திட்ட அலுவலராக வணிகவியல்துறை உதவிப்பேராசிரியை திருமதி கி.மேகலா ஷர்மினி அவர்கள் செயல்படுகிறார்கள். இதன் சார்பில் 03.07.2017 அன்று மாணவர்கள் மற்றும் ஆசிரியர் அலுவலர்களுக்கு ஒரு நாள் இலவச கண்சிகிச்சை முகாம் நடைபெற்றது. மேலும் 06.07.2017 அன்று திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி ஆதரவில் இரத்த வகை கண்டறியும் முகாம் நடைபெற்றது. இம் முகாமில் 700 மாணவர்கள் பங்கு பெற்றனர். மேலும் அரவிந்த் கண் மருத்துவமனை சார்பில் 18.08.2018 அன்று மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்களுக்கு இலவச கண் சிகிச்கை முகாம் நடைபெற்றது.

திசையன்விளை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் சார்பில் 30.01.2018 அன்று கல்லூரி மாணவர்களுக்கு தொழு நோய் விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. மேலும் அதே நாளில் தெ.கள்ளிகுளம் G.M.மருத்துவமனை மருத்துவர் மற்றும் தெ.கள்ளிகுளம் பனிமய மாதா ஆலய தர்மகர்த்தா Dr.M.ஜெபஸ்டின் ஆனந்த் அவர்கள் தலைமையில் தொழு நோய் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

**வினாடி வினாக் குழு :**

வினாடி வினாக் குழுவின் பொறுப்பாளராக கணிதத்துறை உதவிப் பேராசிரியர் திருமதி சி.என்.செலைன் பிரியா செயலாற்றுகிறார். இதன் அங்கத்தினர்கள் BSNL திருநெல்வேலி மற்றும் புனித சவேரியார் கல்லூரி, திருநெல்வேலி நடத்திய வினாடி வினாப் போட்டிகளில் கலந்து பரிசுகளைப் பெற்றுள்ளனர்.

**விளையாட்டுத்துறை** :

நமது கல்லூரியின் விளையாட்டுத் துறை உடற்கல்வி இயக்குனர் முனைவர் J.ஜெய்சன் அவர்கள் தலைமையில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்துறை சென்ற ஆண்டை விட மிகச்சிறப்பாக பல வெற்றிகளைப் பெற்றுள்ளது. இந்த ஆண்டு இத்துறை பS தூக்கும் போட்டியில் சிறப்பாக செயல்பட்டது.

- ❖ மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் சார்பில் கல்லூரிக்கிடையே நடத்திய பSதூக்கும் போட்டியில் நமது கல்லூரி சார்பில் பங்கு பெற்று ஒட்டு மொத்த சாம்பியன் பட்டம் பெற்ற மாணவர்களின் விவரம்.

பெண்கள் அணி :

| வ.எண். | பெயர் | வகுப்பு | தரம் |
|---|---|---|---|
| 1 | ஜெ.ஜான்மெர்லின் | III B.Sc வேதியியல் | II |
| 2 | எம்.லலிதா குமார் | I M.Sc. கணிதம் | II |
| 3 | டி.திவ்யா | II B.Com. (SF) | I |
| 4 | ஐ.பிருந்தா | II B.Sc இயற்பியல் | II |
| 5 | ஜெ.ஜெசிந்தா ஜெலின் | I BBA | I |
| 6 | ஜெ.ஜெனிஸ் இவாஞ்சலின் | I B.Sc. கணிதம் (SF) | III |
| 7 | ஜெ.மஜுலா மினொல்டா | I B.Com (SF) | III |

ஆண்கள் அணி :

| வ.எண். | பெயர் | வகுப்பு | தரம் |
|---|---|---|---|
| 1 | கே.பிரதீப்குமார் | III B.Com | II |
| 2 | ஒய்.அருண் ராஜ் | III B.Sc கணிதம் (SF) | II |
| 3 | ஏ.டேனியல் அஜித ராஜா | III B.Sc (CS) | II |
| 4 | ரோஷன் | I BBA | IV |
| 5 | சங்கர மூர்த்தி | I B.Com | II |

- ❖ மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் கல்லூரிகளுக்கு இடையே நடத்திய மாணவிகள் கபடி போட்டியில் நமது கல்லூரி மாணவிகள் அணி 4-வது இடம் பெற்றது.
- ❖ முதலாமாண்டு கணிதவியல் மாணவன் புருஷோத்தமன் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக தடகள போட்டியில் குண்டு எறிதலில் போட்டியில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.
- ❖ முதலாமாண்டு கணிதவியல் துறை மாணவன் புருஷோத்தமன் தமிழக அரசு சார்பில் மாவட்ட அளவில் நடத்தப்பட்ட முதலமைச்சர் கோப்பைக்கான தடகள

போட்டியில் குண்டு எறிதலில் முதலிடம் பெற்று மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு பெற்றுள்ளார்.

- ❖ இரண்டாமாண்டு இயற்பியல் துறை மாணவி ஐ.பிருந்தா மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் நடத்திய தடகள போட்டியில் 400 மீட்டர் தடை தாண்டும் போட்டியில் இரண்டாம் இடம் பெற்று வெள்ளி பதக்கம் பெற்றுள்ளார்.
- ❖ மாவட்ட அளவில் திருநெல்வேலி மாவட்ட பSதூக்கம் கழகம் நடத்திய பSதூக்கும் போட்டியில் நமது கல்லூரி மாணவிகள் அணி 6 தங்கப்பதக்கமும் ஒரு வெள்ளிப்பதக்கமும் பெற்று ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை வென்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தது. இதே போட்டியில் ஆண்கள் பSதூக்கும் பிரிவில் மாணவர்கள் அணி 3 வெள்ளி பதக்கமும், 2 வெண்கலப் பதக்கமும் பெற்றுள்ளனர்.
- ❖ மாவட்ட அளவில் திருநெல்வேலி மாவட்ட பளுதூக்கும் கழகம் நடத்திய சீனியர் பSதூக்கும் போட்டியில் நமது கல்லூரி பெண்கள் அணி 3 தங்கப்பதக்கமும் 3 வெள்ளிப்பதக்கமும் பெற்று ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை வென்றது.
- ❖ மாநில அளவில் தமிழ்நாடு பளு தூக்கும் சங்கம் நடத்திய ஜுனியர் பSதூக்கும் போட்டியில் நமது கல்லூரி பெண்கள் அணி 5 வெள்ளிப்பதக்கமும், ஒரு வெண்கலப்பதக்கமும் பெற்று மாநில அளவில் 3-வது இடம் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்தது. மேலும் சப்ஜுனியர் மற்றும் சீனியர் பS தூக்கும் போட்டியில் நமது கல்லூரி மாணவியர் அணி ஒரு வெள்ளிப்பதக்கம் பெற்றுள்ளது.
- ❖ தமிழ்நாடு பளு தூக்கும் சங்கம் தென் மண்டல அளவில் நடத்திய பSதூக்கும் போட்டியில் நமது கல்லூரி அணி 4 தங்கப்பதக்கமும், ஒரு வெண்கலப்பதக்கமும் பெற்று ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை பெற்றது. மேலும் மாநில அளவில் இளைஞர்களுக்கான பS தூக்கும் போட்டியில் நமது கல்லூரி மாணவி ஜெ.ஜெசிந்தாஜெலின், தங்கப்பதக்கமும், J.மஜீலாமினோல்டா, வெள்ளிப்பதக்கமும் பெற்று தேசிய அளவில் ை`தராபாத்தில் நடக்கும் பSதூக்கும் போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பினை பெற்றுள்ளார்.
- ❖ மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு இடையே புனித ஜான்ஸ் கல்லூரி நடத்திய கிரிக்கெட் போட்டியில் நமது கல்லூரி ஆண்கள் அணி 3வது இடம் பெற்றுள்ளது.
- ❖ இந்த ஆண்டு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக பSதூக்கும் போட்டியை நமது கல்லூரி 23.09.2017 அன்று சிறப்பாக நடத்தியது.

- ❖ நமது கல்லூரியின் சார்பில் 15 நாள் பளுதூக்கும் பயிற்சி முகாம் நடத்தப்பட்டு கிராமப்புறம் மற்றும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பSதூக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.
- ❖ ஜோஸ் கார்மென்ட்ஸ் உரிமையாளர் திரு D.எட்வின் அவர்கள் பSதூக்கும் உபகரணங்கள் வாங்க ரூ.20,000/- அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

  நமது கல்லூரி பயின்றோர் கழகம் சார்பில் பெண்களுக்கான 15 கிலோ பளு தூக்கும் உபகரணம் (Weight lifting rod) அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

  நமது கல்லூரியின் பSதூக்கும் மாணவிகள் அணியை ஊக்கப்படுத்தும் விதமாக கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் பலர் நன்கொடை வழங்கி ஊக்கப்படுத்தியுள்ளனர். அவர்களுக்கு நன்றி. (இணைப்பு III)
- ❖ திருநெல்வேலி பSதூக்கும் சங்கத் தலைவர் திரு.தேவதாஸ் அவர்கள் நமது கல்லூரி மாணவியருக்கு பளுதூக்கும் போட்டிக்கு இலவச பயிற்சி அளித்து வெற்றி பெற செய்தார் அவர்களுக்கு எங்களுடைய பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**T.D.M.N.S காமராஜர் அகாடமி :**

தி.தெ.மா.நா.சங்க காமராஜர் அகாடமி கல்லூரியில் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதன் ஒருங்கிணைப்பாளராக முனைவர் ஏ.ராமச்சந்திரன் செயல்பட்டு வருகிறார். வங்கித்தேர்வு, ஸ்டாப் செலக்ஷன் கமிஷன், தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் போட்டி தேர்வுக்கான மாலைநேர வகுப்புகள் தினமும் 4 மணி முதல் 5 மணி வரை நடைபெற்று வருகின்றன. மேலும் மாணவர்களுக்கு போட்டி தேர்வுக்கு விண்ணப்பிக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டுவருகிறது.

**வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் மையம் :**

வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்தும் மைய ஒருங்கிணைப்பாளராக தமிழ்த்துறை தலைவர் முனைவர் த. நிர்மலா, செயல்பட்டு வருகிறார். இவர் கடந்த 2016-2017 ஆண்டிலிருந்து இப்பணியினை பொறுப்பேற்று நடத்தி வருகிறார்.

இந்த மையம் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் முதலாமாண்டு மாணவர்களுக்கு வழிகாட்டுதல் முகாம் நடத்தி அவர்களைப் பள்ளிச் சூழலிலிருந்து கல்லூரிச் சூழலுக்குக் கொண்டு வரும் இணைப்புப் பணி மேற்கொள்ளப்படுகிறது. அந்த வகையில் இந்தக் கல்வி ஆண்டில் 28.06.2017 அன்று முதலாமாண்டு மாணவர்களுக்கு வழிகாட்டுதல் முகாம் நடைபெற்றது.

மேலும் இந்த மையத்தால் முதல்வரால் பரிந்துரைக்கப்படும் மாணவர்களுக்கு வழிகாட்டுதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் வழங்கப்பட்டு வருகிறது. இந்தக் கல்வியாண்டிலும் கல்வியிலும் பிற செயல்பாட்டிலும் பின் தங்கிய மாணவர்களுக்கு ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்களின் உளவியல் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்குத் தகுந்த அறிவுரைகள் கூறப்பட்டுப் பிரச்சினைகள்

தீர்க்கப்பட்டுள்ளன. இந்தக் கல்வியாண்டில் ஏழு மாணவர்கள் இம்மையத்தால் பயனடைந்துள்ளனர்.

இந்த மையம் சார்பில் 05.09.2017 அன்று மாணவர்களுக்கு விபரீத விளையாட்டாகிய 'நீல திமிங்கலம்' பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் வள்ளியூர் காவல் துறை துணை ஆய்வாளர் திரு V.சுந்தரமூர்த்தி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஆலோசனைகளை வழங்கினார்.

இம்மையத்தின் சார்பாக 27.09.2017 அன்று 'Skill Development and Empowerment in the Global Era' என்ற பொருண்மையில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. முனைவர் ந.`ரிபிரகாஷ் (வணிகவியல் துறை பேராசிரியர்) கருத்தாளராகக் கலந்து கொண்டு பேசினார்.

மேலும் 05.01.2018 அன்று இளங்கலை மூன்றாமாண்டு தமிழ் பயிலும் மாணவர்களுக்கு வகுப்பறையில் ஆலோசனைகள் வழங்கப்பட்டது. மாணவர்கள் இளங்கலை பட்டப் படிப்பினை முடித்த பின்னர் அவர்கள் மேற்கொண்டு என்ன படிக்கலாம் என்பது பற்றியும், அவர்கள் திறனை வளர்த்துக் கொள்வது பற்றியும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

**மகளிர் குழு** :

நமது கல்லூரியின் மகளிர் குழு 11.1.2012 முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக வேதியியல் துறை இணப்பேராசிரியர் முனைவர் து.சாந்தி அவர்கள் செயல்பட்டு வருகிறார். 27.07.2017 அன்று 'Feminism - A New look on Adolescence' என்ற தலைப்பில் முதலாம் ஆண்டு மாணவிகளுக்கு ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. நாகர்கோவில் சுரக்ஷா குடும்பநல சமூக மையத்தின் நிர்வாகி முனைவர் சுரேந்திரன் சமூகவியல் துறைத்தலைவர், தெ.தி.இந்து கல்லூரி, நாகர்கோவில் முனைவர் சொர்ணலதா ராஜு, பொருளாளர் திருமதி அனிதா நடராஜன் ஆகியோர் உடல் நலம் பராமரிப்பு, சமூகம் மற்றும் இளம்பருவத்தில் வரக்கூடிய பிரச்சனைகளும் அதைத் தவிர்க்கக்கூடிய முறைகள் பற்றியும் எடுத்துரைத்தார்கள்.

04.08.2017 அன்று மகளிர்குழு சார்பாக பேராசிரியைகள் ஒரு நாள் சுற்றுலாவாக குற்றாலம் சென்று வந்தனர்.

08.03.2018 அன்று உலக மகளிர்தினவிழா மற்றும் 'Gender Equity through women Empowerment' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. திருவனந்தபுரம் மத்திய நிதித்துறை சரக்கு மற்றும் வேவை வரி இணை ஆணையர் செல்வி பொன்.சுப்பிரியா, I.R.S அவர்கள் கலந்து மாணவிகளுக்கு அரசு நடத்தும் போட்டித் தேர்வுகளை எதிர்கொள்வது பற்றி விரிவான கருத்துரைகளை எடுத்துரைத்தார்கள். அதைத்தொடர்ந்து வழக்கறிஞர் T.முத்துகிருஷ்ணன் அவர்கள் சட்டத்தில் இருக்கின்ற பெண்ணுரிமைகளைப் பற்றிய கருத்துக்களை மிகவும் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

08.03.2018 அன்று மனோன்மனியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் குற்றவியல் துறை நடத்திய பேச்சுப்போட்டியில் நமது கல்லூரி மாணவி L.தில்லை பொன்சித்திரா II B.Sc. Maths (Aided) முதல் பரிசு பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார். மேலும் திருநெல்வேலி தனித்தமிழ் இலக்கியக் கழகம் நடத்திய பேச்சுப்போட்டியில் முதல்பரிசும், பாளையங்கோட்டை, தூய சவேரியார் கல்லூரியில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதல் பரிசும் பெற்றுள்ளார். இந்தக் கல்வியாண்டில் மட்டும் இம்மாணவி பேச்சுப் போட்டியில் பல்கலைகழக அளவில் மற்றும் மாநில அளவில் 12-க்கும் மேற்பட்ட பரிசுகளைப் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இந்த கல்வியாண்டின் கடைசியில் (ஏப்ரல் மாதம்) ஒரு நாள் சுற்றுலாவாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, முட்டம் ஆகிய சுற்றுலாத் தலங்களுக்கு மகளிர்குழு பேராசிரியைகள் சென்று வர திட்டமிட்டுள்ளனர்.

**வேலை வாய்ப்பு மையம்** :

நமது கல்லூரியில் 05.02.2018 அன்று JAMS கடல் சார் கல்லூரி சார்பில் மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வை நம்பிக்கையோடு எதிர் கொள்வது தொடர்பான ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. மேலும் 06.03.2018 அன்று வள்ளியூர் ரோட்டரி கிளப் ஆதரவில் "தேடலை தொடங்கு வெற்றியை முழங்கு" என்ற தலைப்பில் தன்னம்பிக்கையூட்டும் கருத்தரங்கு நடைபெற்றது. நிகழ்ச்சியின் கருத்தாளராக திருநெல்வேலி வானொலி நிலைய அதிகாரி திரு சிவ ஆனந்த கிருஷ்ணன் அவர்கள் கலந்து சிறப்பித்தார்கள்.

**ரோட்டராக்ட் கிளப் :**

நமது கல்லூரியின் ரோட்டராக்ட் கிளப் தலைவராக செல்வி ஜி.சுகிர்தா காயத்ரி, செயலாளராக, செல்வன் முருகேசன், ஆலோசகராக பேராசிரியர் எஸ்.ஜெ பாலமுருகன், இயற்பியல்துறை உதவிப்பேராசிரியர், ஒருங்கிணைப்பாளராக முனைவர் ஏ.புஷ்பராஜ், விலங்கியல்துறை உதவிப்பேராசிரியர் ஆகியோர் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதன் சார்பில் ROTAR TDMNS YOUTH FEST 2018 என்ற தலைப்பில் தென் தமிழ்நாடு அளவிலான கலைத்திறன் போட்டி நமது கல்லூரியில் 22.02.2018 அன்று

நடைபெற்றது. இதில் ஆட்மேட், டார்ன் கோட், கிராமிய நடனம் மற்றும் ரங்கோலி ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. இந்தப் போட்டிகளில் சுமார் 17 கல்லூரிகளை சேர்ந்த மாணவ, மாணவியர்கள் பங்கு பெற்றனர். இதில் ஒவ்வொரு போட்டிக்கும் முதல் பரிசாக ரூ.3000/- இரண்டாம் பரிசாக ரூ.2000/- மற்றும் மூன்றாம் பரிசாக ரூ.1500/- வள்ளியூர் ரோட்டரி சங்கம் சார்பாக வழங்கப்பட்டது.

**குடிமக்கள் - நுகர்வோர் குழு**

குடிமக்கள் நுகர்வோர் குழு மாணவர்களுக்கு நுகர்வோரின் உரிமைகளையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்த அமைக்கப்பட்ட அமைப்பாகும். இக்குழுவின் ஒருங்கிணைப்பாளராக வணிகவியல்துறை உதவிப்பேராசிரியை திருமதி M.பாத்திமா ரதி செயல்படுகிறார்.

இக்குழுவின் சார்பில் தமிழக அரசின் திருநெல்வேலி உணவு பாதுகாப்பு துறை ஆதரவில் 07.09.2017 அன்று 'உணவு பாதுகாப்பு விழிப்புணர்வு' என்ற தலைப்பில் ஒருநாள் பயிற்சி பட்டறை நடைபெற்றது. பயிற்சி பட்டறையை திருநெல்வேலி உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை அலுவலர் Dr.V.செந்தில் குமார் நடத்தினார்.

மேலும் 14.03.2018 அன்று குடிமக்கள் நுகர்வோர் குழுவும் கல்லூரி விவாதக்குழுவும் இணைந்து "நுகர்வோரும் சமுதாயமும்" என்ற பொருண்மையில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. கருத்தரங்கில் உலக நுகர்வோர் தின நாள் அனுசரிக்கப்பட்டது. மேலும் திரு K.சீதாராமன் அவர்களை நடுவராகவும் ஆறு மாணவர்களை உறுப்பினர்களாகவும் கொண்டு பட்டிமன்றம் நடைபெற்றது.

**கல்வி ஆற்றுப்படுத்துதல் மையம் ( Academic Counselling Cell )**

இந்த மையத்தின் ஒருங்கிணைப்பாளராக தமிழ்த்துறை தலைவி முனைவர். த.நிர்மலா செயலாற்றி வருகிறார். படிப்பில் உயர்நிலையில் உள்ள மாணவ-மாணவிகளை இனம் கண்டு மேலும் ஊக்கப்படுத்தி பல்கலைக்கழக அளவில் சாதனைகள் புரிய தூண்டுவதே இந்த மையத்தின் நோக்கம்.

நமது கல்லூரியின் கல்வி ஆற்றுப்படுத்துதல் மையம் சார்பாக 12.02.2018 அன்று 'Strive for Excellence - A Motivation Programe for High Achievers - 2018' என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கல்விதிறன் மேம்பட்ட மாணவர்களுக்கு கல்லூரியின் மூத்த பேராசிரியர்கள் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று தரவரிசையில் இடம் பெறுவதற்கான பல்வேறு ஆலோசனைகளையும் கருத்துக்களையும் எடுத்துக் கூறினர். விழாவில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக ஏப்ரல் 2017 பட்டமளிப்பு விழாவில் மூன்று தங்கப் பதக்கங்களைப் பெற்ற வேதியியல் துறை மாணவன் நாடார் ஆல்வின் கலந்து கொண்டு தன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். தேர்வு தொடர்பான ஐயங்கள் தெளிவு படுத்தப்பட்டன.

28.02.2018 அன்று கல்வித்திறன் மேம்பட்ட முதலாமாண்டு மாணவர்களுக்கு வகுப்பறையில் பகுதி I தமிழ் பாடத்தில் அதிக மதிப்பெண் பெறுவதற்கான ஆலோசனை வழங்கப்பட்டது. மேலும் 05.03.2018 அன்று இரண்டாமாண்டு மாணவர்களுக்கு வகுப்பறையில் கலந்துரையாடல் மூலம் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

**புதிய முயற்சிகள்** :

**கண்காணிப்பு கேமிரா :** (CCTV)

கல்லூரியின் பாதுகாப்பு மற்றும் கட்டுப்பாடு கருதி கல்லூரியில் 7 கண்காணிப்பு கேமிராக்கள் பயின்றோர் கழகத்தின் சார்பில் 23.02.2018 அன்று நிறுவப்பட்டது.

**கணினிமய அங்க அடையாள வருகைப்பதிவேடு** : (Bio-Metric Attendance)

பயின்றோர் கழக ஆதரவில் கல்லூரி ஆசிரியர் அலுவலர்களின் அன்றாட வருகையை பதிவு செய்ய வருகைப்பதிவேடு கணினி மயமாக்கப்பட்டு கணினிமய அங்க அடையாள வருகைப்பதிவேட்டு முறை 23.02.2018 முதல் செயல் படுத்தப் பட்டுவருகிறது.

**ஆங்கில மொழி ஆய்வுக்கூடம் :**

2017-2018-ம் கல்வியாண்டில் ஆங்கிலத்துறையால் (சுயநிதி பிரிவு) SPELT என்னும் பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இதில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவ - மாணவியர் பயிற்சி பெற்று வருகின்றனர். புத்தகபுழுக்களாய் இயங்கி வரும் மாணவர்களை ஆங்கில செயல்திறன் மிக்கவர்களாய் மாற்றுவதே இவ் வகுப்பின் நோக்கம். வகுப்பில் பயின்றதை செயல்முறைக் கல்வி வாயிலாக வெளிக்கொண்டுவர இப்பயிற்சி உதவுகிறது. இதில் கேட்டல், பேசுதல், வாசித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய நான்கு திறன்களையும் மேம்படுத்தும் வகையிலான காணொலிகள், கணினியில் ஒளிபரப்பப்பட்டு தேர்வுகள் மூலமாக அவர்கள் திறன்கள் சோதித்து அறியப்பட்டு வருகிறது. மாணவர்களின் ஆங்கில மொழி செயல் திறன்களை ஊக்கப்படுத்தும் விதமாக ஒரு நிமிடப் பேச்சு, வார்த்தை விளையாட்டுகள், நாப்பிறழி, சிறுகதை எழுதுதல், நேர்காணல் மாதிரிகள் போன்ற செயல்கள் மூலமாக செயல்வழி ஆங்கில மொழிக்கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

**கல்லூரி விடுதி** :

நமது கல்லூரி வளாகத்தில் மாணவிகள் நலன் கருதி திருமிகு.M.S.அருணாச்சல நாடார் நினைவு மகளிர் விடுதி சிறப்புடன் செயல்பட்டு வருகிறது. இந்த விடுதி 60 மாணவியர்கள் தங்கி பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கல்வியாண்டில் இவ்விடுதியில் 17 மாணவிகள் தங்கி

படித்துப் பயன்பெற்று வருகின்றனர். பொருளாதாரத் துறை உதவிப் பேராசிரியை.திருமதி.M.I.கோகில வாணி விடுதி துணைக் கண்காணிப்பாளராக செயல்படுகிறார். கல்லூரி முதல்வரே இவ்விடுதியின் கண்காணிப்பாளராக செயல்படுகிறார்.

**நன்றி** :

மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் மேன்மைக்கு ஆவன செய்வதோடு கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவரும் நமது கல்லூரி நிர்வாக சபைத் தலைவர், கல்லூரிச் செயலர், பொருளாளர், உதவித்தலைவர், உதவிச் செயலாளர் மற்றும் கல்லூரிக்குழு, கல்லூரி ஆட்சிக்குழு மற்றும் திருநெல்வேலி தெ~ண மாற நாடார் சங்க நிர்வாக சபை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வி, விளையாட்டு மற்றும் இதர செயல்பாடுகளில் பல்கலைக்கழக மற்றும் மாநில அளவில் நடைபெற்ற போட்டிகளில் பெருமளவில் மாணவர்களைப் பங்கு பெற மற்றும் வெற்றி பெற தயார் செய்த அனைத்து பேராசிரியப் பெருமக்கள், விளையாட்டு அலுவலர்கள் அவர் தம் துணை நின்ற அலுவலக நண்பர்கள், வழிகாட்டுதலில் வெற்றிகள் பல பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்த மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் நன்றி. உங்கள் முயற்சியும், வெற்றியும் தொடர மனமாரப் பாராட்டி இவ்வாண்டறிக்கையை நிறைவு செய்கிறேன்.

**நன்றி! வணக்கம்.**

**முனைவர்.இரா.பொன் முருகன்**
**முதல்வர்**

**இணைப்பு - I**

பல்கலைக் கழக ஏப்ரல் 2017 தேர்வில் மாணவர் தேர்ச்சி விபரம்

| வ.எண் | அரசு நிதி உதவி பெறும் துறைகள் | மாணவர்களின் எண்ணிக்கை | வெற்றி பெற்றவர்கள் | தேர்வு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வரலாறு | 47 | 37 | 79 |
| 2 | பொருளாதாரம் | 43 | 35 | 81 |
| 3 | கணிதம் - இளங்கலை | 45 | 44 | 98 |
| 4 | இயற்பியல் | 36 | 32 | 89 |
| 5 | வேதியியல் | 37 | 32 | 86 |
| 6 | தாவரவியல் | 36 | 29 | 81 |
| 7 | வணிகவியல் - இளங்கலை | 54 | 48 | 89 |
| 8 | கணிதம் - முதுகலை | 24 | 24 | 100 |
| 9 | வணிகவியல் - முதுகலை | 27 | 27 | 100 |

| வ.எண் | சுயநிதித் துறைகள் | மாணவர்களின் எண்ணிக்கை | வெற்றி பெற்றவர்கள் | தேர்வு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | ஆங்கிலம் | 55 | 51 | 93 |
| 2 | தமிழ் | 17 | 15 | 88 |
| 3 | கணிதம் | 43 | 37 | 86 |
| 4 | கணிப்பொறியியல் | 26 | 25 | 96 |
| 5 | தகவல் தொழில்நுட்பம் | 16 | 13 | 81 |
| 6 | வணிகவியல் இளங்கலை | 57 | 48 | 84 |
| 7 | வணிக நிர்வாகம் | 51 | 37 | 73 |
| 8 | வேதியியல் முதுகலை | 8 | 7 | 88 |
| 9 | கணிப்பொறியியல் முதுகலை | 11 | 10 | 91 |
| 10 | வணிகவியல் முதுகலை | 05 | 03 | 60 |
| 11 | கணிதம் - நிறைஞர் | 15 | 13 | 87 |
| 12 | வணிகவியல் - நிறைஞர் | 12 | 12 | 100 |
| | **மொத்தம்** | **665** | **579** | **87** |

**இணைப்பு – II**

பல்கலைக்கழக ஏப்ரல் 2017 தேர்வில் முதன்மையாளர்
பட்டியலில் இடம் பெற்ற மாணவர்கள் விவரம்

| வ. எண் | மாணவரின் பெயர் | பல்கலைக் கழக தரம் |
|---|---|---|
| **தமிழ் (பகுதி - I)** | | |
| 1 | பி.பரமேஸ்வரி | 2 |
| 2 | எஸ்.ஆரோக்கிய மனிஷா | 3 |
| 3 | ஆர்.கோமதி | 5 |
| 4 | எஸ்.பத்மா | 11 |
| 5 | ஜெ.ரெஜிலா | 11 |
| 6 | எஸ்.பிரேமா | 12 |
| 7 | டி.இசக்கிமுத்து | 12 |
| 8 | ஆர்.அந்தோனி ராகுல் | 12 |
| 9 | ஆர். அனிதா | 14 |
| 10 | டி.ஜெரின் சோனியா | 15 |
| 11 | ஏ.சில்டா | 15 |
| 12 | எம்.ஜன்னத் நாகூர் பிர்த்தாஸ் | 19 |
| 13 | எம்.ஆஷா | 20 |
| 14 | எம்.பவித்ரா தேவி | 20 |
| | | |
| **இந்தி (பகுதி -I)** | | |
| 1 | நாடார் ஆல்வின் | 1 |
| | | |
| **ஆங்கிலம் (பகுதி -II)** | | |
| 1 | நாடார் ஆல்வின் | 5 |
| | | |
| **தமிழ்** | | |
| 1 | ஜெ.மேரி பிரவீனா | 6 |
| 2 | எஸ்.சைலஜா | 20 |
| | | |
| **வரலாறு** | | |
| 1 | ஈ.துர்கா தேவி | 7 |
| 2 | பி.பிரிட்டா | 14 |
| | | |
| **பொருளாதாரம்** | | |
| 1 | எஸ்.பிரியங்கா | 14 |
| 2 | எல்.ஜெனிபர் | 15 |
| | | |
| **வேதியியல்** | | |
| 1 | நாடார் ஆல்வின் | 1 |
| 2 | எஸ்.ஆரோக்கிய மோனிஷா | 6 |
| 3 | எஸ்.கிருத்திகா | 12 |
| | | |
| **வேதியியல் முதுகலை** | | |
| 1 | ஏ.அமுதா | 2 |
| | | |

**இணைப்பு – III**

பளுதூக்கும் போட்டிக்கு நிர்வாகம், பேராசிரியர்கள் மற்றும் அலுவலர்களின் ஊக்குவிப்பு.

| வ.எண் | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு.ஆர்.சண்முகவேல்நாடார் | ரூ.4500/- (பரிசு வெற்றவர்களுக்கு விருந்து) |
| 2 | திரு.எஸ்.பி.தமிழ் செல்வன் | ரூ.500/- (போட்டியாளர்களுக்கான ஊக்க உணவு)<br>ரூ.2700/- (தேசிய போட்டியில் கலந்து கொள்ள ஜெசிந்தா ஜெலினுக்கு ஒரு ஜோடி ஷு வாங்க) |
| 3 | முனைவர்.டி.வானிலா | ரூ.1500/- |
| 4 | முனைவர்.ஏ.ராமச்சந்திரன் | ரூ.2500/- (பரிசு பெற்றவர்களுக்கு விருந்து) |
| 5 | முனைவர்.ஆர்.முருகேசன் | ரூ.1000/- |
| 6 | இயற்பியல்துறை | ரூ.700/- |
| 7 | முனைவர்.என்.`ரிபிரகாஷ் | ரூ.2500/- |
| 8 | வணிக நிர்வாகவியல் துறை | ரூ.1000/- (பரிசு பெற்றவர்களுக்கு விருந்து) |
| 9 | வணிக நிர்வாகவியல் துறை | ரூ.2200/- (ஜெசிந்தா ஜெலினின் விளையாட்டு ஊக்குவிப்பு) |
| 10 | திரு.எஸ்.முருகவேல் | ரூ.500/- |
| 11 | திரு.எஸ்.பால்மோகன் | ரூ.500/- |
| 12 | பெயர் குறிப்பிட விரும்பாத பலர் | ரூ.20000/- (பெண்கள் பளுதூக்கும் எந்திரம் (Weight lifting rod) வாங்க மற்றும் இரு நாள் விருந்து). |

இணைப்பு-IV

துறை சார் மன்ற நிகழ்வுகள்

| வ. எண் | துறை | நாள் | நிகழ்ச்சிகள் | சிறப்பு விருந்தினர் |
|---|---|---|---|---|
| 1 | வணிகவியல் (நிதி உதவி) | 15.02.2018 | Bit coin-A Paradigm of cryptocurrency- கருத்தரங்கு | முனைவர். சிவகுமார் (VIT, AP Campus, ஆந்திரா)<br>முனைவர். டார்லிங் செல்வி, (ராணி அண்ணா கல்லூரி) |
| 2 | பொருளாதாரம் | 12.03.2018 | பொருளாதாரம் மன்ற ஆரம்ப விழா | திரு. ஐ. ரமேஷ், (துணை தாசில்தார், ராதாபுரம்.) |
| 3 | தமிழ்த்துறை (சுயநிதி) | 27.02.2018<br>07.02.2018 | 1. கோயிற்கலை பன்முகப் பார்வை - கருத்தரங்கு<br>2. புத்தகக் கண்காட்சி பார்வையிடல் | 1. திரு.முத்தாலங்குறுச்சி காமராசு<br>2. 59 மாணவர்கள் கலந்து கொண்டு ரூ.15000/- மதிப்புள்ள புத்தகங்கள் வாங்கப்பட்டது. |
| 4 | கிராமியக் கலை இலக்கிய மன்றம் | 14.02.2018 | நாடகத்தின் நிழல் வடிவம் - தோல் பாவை கூத்து – பயிற்சி பட்டறை | 1. முனைவர்.M.பீட்டர் ஆரோக்கிய ராஜ்,<br>2. கலைவளர் மணி பா.முத்து சந்திரன் |
| 5 | தமிழ்த் துறை | 21.08.2017<br>14.09.2017<br>11.10.2017 | 1. காந்திய சிந்தனை மற்றும் காந்திய தத்துவம் - கருத்தரங்கு<br>2. ஆளுமையை வளர்த்தல் - கருத்தரங்கு<br>3. இலக்கிய மன்ற விழா | திரு.M.A.ஜெய கண்ணன் (உதவி இயக்குநர் கதர் மற்றும் கைத்தொழில் ஆணையம் மதுரை)<br>1. திரு.ஜோ.டி.குருஸ் (சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர்- முன்னாள் மாணவர்)<br>2. திரு.வந்தேமாதரம் வி. இராஜ்குமார் |
| 6 | வணிக நிர்வாகவியல் | 15.03.2018<br>09.02.2018 | 1. வள்ளியூர் தொழிற் பேட்டை பார்வையிடல்<br>2. Young Entrepreneur – The Challenges and Opportunities – கருத்தரங்கு | ஏற்பாடு: திரு.S.ராஜ்குமார் (கல்லூரிக் குழு உறுப்பினர்)<br>திரு.D.எட்வின் (ஜோஸ் கார்மென்ட்ஸ்)<br>திரு.E.கவின் வேந்தன் (முல்லை பைனான்ஸ்) |

| வ. எண் | துறை | நாள் | நிகழ்ச்சிகள் | சிறப்பு விருந்தினர் |
|---|---|---|---|---|
| 7 | வேதியியல் (நிதி உதவி) | 27.10.2017 | மன்ற துவக்க விழா | முனைவர். S.அன்பரசன் (ஆதித்தனார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி) |
| 8 | வணிகவியல் ( சுய நிதி ) | 24.08.2017<br><br>22.02.2018 | 1.New Dimensions of Commerce in the Globalized Era-2017- கருத்தரங்கு<br><br>2. Government Assistance to Micro, Small and Medium Enterprises- கருத்தரங்கு | திரு.M.ஜோசப் பீட்டர் ராஜா, முனைவர். T.ஆன்ட்ரூஸ் ஸ்காட், (அழகப்பா கல்லூரி காரைக்குடி)<br><br>திரு.S.கணேசன் (மாவட்ட தொழில் மைய மேலாளர்)<br>திரு.A. ஆனந்த சேகர் (ஆனந்தா பிரஷர் குக்கர்) |
| 9 | வரலாறு | 19.02.2018 | மன்ற துவக்க விழா | முனைவர்.L. ரவிசங்கர் (திருவள்ளுவர் கல்லூரி) |
| 10 | தாவரவியல் | 16.02.2018 | மன்ற துவக்க விழா மற்றும் பயின்றோர் கழக விழா | திரு.M. நாராயணன் துணை ஆட்சியர் திருவள்ளுவர் மாவட்டம்- முன்னாள் மாணவர் |
| 12 | ஆங்கிலம் ( சுய நிதி ) | 22.06.2017<br>05.09.2017<br>12.02.2018 | 1. யோகா தினம்<br>2. ஆசிரியர் தினம்<br>3. மன்ற துவக்க விழா மற்றும் Litero Pagaentry –கண்காட்சி | முனைவர் விஜிலா ஜெப ரூபி (ராணி அண்ணா கல்லூரி) |
| 13 | கணிதம் (சுய நிதி) | 16.03.2018 | Differentiation and Integration – கருத்தரங்கு | முனைவர். M.S. முத்தரசு (CBM கல்லூரி, கோயம்புத்தூர்)<br>திருமதி.M.தீபா, (கிருஷ்ணமாள் பெண்கள் கல்லூரி, கோயம்புத்தூர்) |
| 14 | கணிதம் | 06.02.2018<br>07.02.2018<br>13.02.2018 | 1. ஏர்வாடி முதியோர் இல்லம் பார்வையிடல்,<br>2. வள்ளியூர் தொழிற் பேட்டை பார்வையிடல்<br>3. அணைக்கரை மன வளர்ச்சி குன்றிறோர் கருனை இல்லம் பார்வையிடல் | |

| வ. எண் | துறை | நாள் | நிகழ்ச்சிகள் | சிறப்பு விருந்தினர் |
|---|---|---|---|---|
| 15 | இயற்பியல் | 30.06.2017<br><br>27.02.2018 | 1. மன்ற துவக்க விழா<br><br>2. வள்ளியூர் தொழிற் பேட்டை பார்வையிடல் | முனைவர். S.மீனாட்சி சுந்தரம். (பரமகல்யாணி கல்லூரி) திரு. S. அறிவழகன் (IBN SINA) மருத்துவ கல்லூரி)<br><br>ஏற்பாடு: திரு.S.ராஜ்குமார் (கல்லூரிக் குழு உறுப்பினர்) |
| 16 | கணிப்பொறி | 09.03.2018 | Cloud computer using.Net - பயிற்சி பட்டறை | முனைவர்.R. ரஞ்சித் (பரம கல்யாணி கல்லூரி.) |